JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 15/2018 Date: 21.07.2026 P.W. 1 / LW

| | |
|---|---|
| பெயர் | திரு. ராஜசேகர், காவல் உதவி ஆய்வாளர், டி8 முத்தாப்புதுப்பேட்டை காவல் நிலையம். |
| தந்தை பெயர் க/பெ | |
| முகவரி | |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 21st day of July 2026.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது டி8 முத்தாப்புதுப்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு பணி புரிந்த உதவி ஆய்வாளர் திரு. ராஜன் பணி மாறுதல் அடைந்து சென்றுவிட்டதால் அவரது கையொப்பம் எனக்கு பரிட்சியம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 26.06.2016 ஆம் தேதி உதவி ஆய்வாளர் நிலைய அலுவலில் இருந்த போது சாட்சி திரு. செல்வராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை குற்ற எண். 347/2016, சட்டப்பிரிவுகள் 341, 384 உ/இ 34 இதச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அதன் பின்பு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சத்தியமூர்த்தி, ராஜேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும், மாதிரி வரைப்படமும் தயார் செய்து பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்று அவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும், இவ்வழக்கின் தமிழ்வாணன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகளை கடந்த 26.06.2016 அன்று கைது செய்த போது எதிரிகள் சுரேஷ் மற்றும் சுரேந்தர் ஆகியோர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். முதலாம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சிறிய கத்தி ஒன்று கைப்பற்றுதல் மகஜரில் அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேலும், இரண்டாம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த குற்ற சொத்தான ரூ. 350/- பணத்தை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி அவகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கு

சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதன் பின்பு அனைத்து சாட்சிகளின் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. புகார் அ.த.சா.ஆ. 1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 2 ஆகவும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் முறையே அ.த.சா.ஆ. 3 மற்றும் அ.த.சா.ஆ. 4 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி முறையே அ.த.சா.ஆ. 5 மற்றும் அ.த.சா.ஆ. 6 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் முறையே அ.த.சா.ஆ. 7 மற்றும் அ.த.சா.ஆ. 8 ஆகவும், படிவம் 91 முறையே அ.த.சா.ஆ. 9 மற்றும் அ.த.சா.ஆ. 10 ஆகவும், பிரிவு மாற்று அறிக்கை அ.த.சா.ஆ. 11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள் இவ்வழக்கில் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில், சொன்ன தேதியில் எவ்வித வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், இப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur